


# உங்களுக்கு உரிமைகள் உள்ளன!

## குடியேற்ற அந்தஸ்த்தைப் பொருட்படுத்தாமல், பின்வருவனவற்றிற்கு உங்களுக்கு உரிமை உண்டு:

- பயிற்சிக் காலகட்டங்கள் உட்பட, அனைத்து மணிநேர வேலைக்கும் ஊதியம் பெறுவது
- குறைந்தபட்ச ஊதியம் பெறுவது, அதிக நேர வேலைக்கு ஊதியம் பெறுவது மற்றும் வழக்கமாக ஊதியம் பெறுவது (வழக்கமாக வாராந்திரம் அல்லது இரு வாரத்திற்கு ஒருமுறை)
- உங்கள் ஊதியப் பிடித்தங்கள் பற்றி அறிந்துகொள்வது, எழுத்துமூல முன் அனுமதியின்றி ஒருபோதும் பணம் பிடித்தம் செய்யப்படாதிருப்பது
- பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் முறைகேடு ஆகியவற்றின் பாதிப்பு இல்லாத பாதுகாப்பான சூழலில் வேலை செய்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு
- பழிவாங்கல் பயம் இல்லாமல் nys தொழிலாளர் துறையின் உதவியைக் கோருவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு

## உங்களை நீங்களே பாதுகாத்திடுங்கள்!

### இதன் பதிவை வைத்திருங்கள்:

- நீங்கள் பணியாற்றிய நாட்கள் மற்றும் மணி நேரங்கள்
- நீங்கள் எவ்வளவு ஊதியம் பெற்றீர்கள் மற்றும் எப்போது
- வேலையின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் (காயங்கள், அச்சுறுத்தல்கள் அல்லது சச்சரவுகள்) தேதிகள் மற்றும் நேரங்கள் மற்றும் அவை குறித்து நீங்கள் யாரிடம் புகாரளித்தீர்கள் என்ற விவரம்

P746.2 TA (3/24)





# கட்டாயமாக வேலை வாங்குதல் ஒரு குற்றமாகும்!

## பின்வருமாறு இருப்பின், அது தண்டனைக்குரிய உரிமை மீறலாகும்

**நீங்கள்:**



- கடனை அடைப்பதற்காக வேலை செய்ய வேண்டும் என்று உங்களிடம் சொல்லப்படுவது
- உங்கள் பாஸ்போர்ட்டை அல்லது ஐடி-ஐ உங்கள் முதலாளி எடுத்துக்கொள்வார் என்று உங்களிடம் சொல்லப்படுவது



- கிரீன் கார்டு அல்லது பணம் போன்ற நீங்கள் பெறாத பயன்களைப் பெறுவீர்கள் என்று உறுதியளிக்கப்படுவது



- வேலை செய்யாவிட்டால் குடியேற்ற அதிகாரி அல்லது போலீஸ் வரவழைக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்படுவது
- உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தினருக்குத் தீங்கிழைக்கப்படும் என்று அச்சுறுத்தப்படுவது



- உண்மையில் தீங்கிழைக்கப்படுவது, அல்லது ஒரு குடும்ப உறுப்பினருக்கு தீங்கிழைக்கப்படுவது

உங்களுடைய உரிமைகள் பற்றியும், என்ன உதவி கிடைக்கிறது என்பதைப் பற்றியும் மேலும் தகவல்களைப் பெறுவதற்கு, தேசிய மனித ஆட்கடத்தல் துறையை **888.373.7888** எனும் 24 மணிநேர ஹாட்லைனில் அல்லது **877.466.9757** எனும் DOCE ஹாட்லைனில் அழைக்கவும்.

**trafficking@labor.ny.gov** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் நீங்கள் மின்னஞ்சல் செய்யலாம்

**888-469-7365** | @nyslabor | www.labor.ny.gov

நியூயார்க் ஸ்டேட் தொழிலாளர் துறை ஒரு சம வாய்ப்பு பணிவழங்குபவர்/திட்டம். ஊனமுற்றோருக்கு, வேண்டுகோளின் பேரில் துணைக் கருவிகள் மற்றும் சேவைகள் இலவசமாகக் கிடைக்கின்றன TTY/TDD 711 அல்லது 1-800-662-1220 (ஆங்கிலம்) / 1-877-662-4886.